தமிழ் முரசு

தனியார் வேலை வாய்ப்பு முகாம்

ஈரோட்டில் 276 பேருக்கு பணி ஆணை

ஈரோடு, பிப். 10– ஈரோடு சென்னிமலை சாலையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேற்று தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு வேலைவாய்ப்புதுறையின் உதவி இயக்குநர் ராதிகா தலைமை தாங்கினார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஜோதி முன்னிலை வகித்தார். இந்த முகாமில் 24 மாற்றுத்திறனாளிகள் உட்பட 721பேர் பங்கேற்றனர். 52 வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு, முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தினர். இதில், 88 பெண்கள், 188 ஆண்கள் என மொத்தம் 276 பேர் தனியார் நிறுவன பணிக்கு தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கான பணி ஆணை வழங்கப்பட்டது. பணி ஆணை பெற்றவர்களில் 5 பேர் மாற்றுத்திறனாளிகள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊட்டி-தொரைஹட்டி சாலையில் தடுப்பு சுவர் அமைக்கும் பணியில் நெடுஞ்சாலைத்துறை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஊட்டி-தொரையட்டி சாலையில்

தடுப்பு சுவர் அமைக்கும் பணி தீவிரம்

ஊட்டி, பிப். 10– ஊட்டியில் இருந்து தொரையட்டி செல்லும் சாலையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம் என்பதால், பெரும்பாலான சாலைகள் தாழ்வான மற்றும் பள்ளத்தாக்கு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சாலையில் மழைக்காலங்களில் மண் சரிவு ஏற்படுவது வாடிக்கையாக உள்ளது. இதனை தடுப்பதற்காக நெடுஞ்சாலை துறை சார்பில், சாலையோரங்களில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. தற்போது மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கு செல்லும் சாலை ஓரங்களில் தடுப்பு சுவர் அமைக்கும் பணிகள் துரித கதியில் நடந்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஊட்டியில் இருந்து தொரையட்டி செல்லும் சாலையில் இருபுறமும் நெடுஞ்சாலைத்துறையினர் தடுப்புச் சுவர் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் ஊட்டியில்-மஞ்சூர் செல்லும் சாலையோரங்களிலும் தடுப்பு சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதன் மூலம் மழைக்காலங்களில் சாலை ஓரங்களில் மண் சரிவு ஏற்படுவதையும், தடுப்பு சுவர் இடிந்து விழுவதையும் தடுக்க முடியும் என நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிக்கண்ணா கல்லூரியில் நாளை

ரூ.1120.57 கோடி குடிநீர் திட்ட பணி துவக்க விழா

கலெக்டர் கிறிஸ்துராஜ் தகவல்

திருப்பூர், பிப். 10– திருப்பூர் சிக்கண்ணா கல்லூரி வளாகத்தில் நாளை புதிய குடிநீர் திட்ட பணிகள் தொடக்க விழா நடைபெற உள்ளதாக கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது: திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு ரூ.1120.57 கோடியில் புதிய குடிநீர் திட்ட பணிகள் தொடக்க விழா மற்றும் ரூ.53.48 கோடி மதிப்பில் புதிய பல்நோக்கு கூடம், ரூ.12.87 கோடி மதிப்பில் புதிய பன்னடுக்கு வாகன நிறுத்தும் இடம் ஆகியவற்றின் திறப்பு விழா நாளை (10ம் தேதி) காலை 9 மணிக்கு திருப்பூர் சிக்கண்ணா அரசு கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. இதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமை தாங்குகிறார். இதனை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்ற உள்ளார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். கலெக்டர் கிறிஸ்துராஜ் வரவேற்பு உரையாற்றுகிறார். அரசு முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன் திட்ட விளக்க உரையாற்றுகிறார். எம்.பிக்கள் ஆ.ராசா, சுப்பராயன், பி.ஆர் நடராஜன், செல்வராஜ் எம்.எல்.ஏ., மேயர் தினேஷ்குமார், நலவாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர். மேலும் துணை மேயர் பாலசுப்பிரமணியம், மாநகராட்சி 4வது மண்டல தலைவர் இல.பத்மநாபன் மற்றும் பலர் கலந்துகொள்ள உள்ளனர். முடிவில் மாநகராட்சி கமிஷனர் பவன் குமார் நன்றி கூறுகிறார். இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து

டெல்டா பாசனத்திற்கு நீர்திறப்பு 4 ஆயிரம் கனஅடியாக குறைப்பு

நீர்மட்டம் 66.52 அடியாக சரிவு

மேட்டூர், பிப். 10– மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கான நீர்திறப்பு இன்று காலை முதல் 4 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. நீர்மட்டம் 66.52 அடியாக சரிவடைந்துள்ளது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இன்றி வறட்சி நிலவுவதால் ஒகேனக்கல் மற்றும் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறைவாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 300 கனஅடியாக நீடிக்கிறது. இதேபோல் மேட்டூர் அணைக்கு நேற்று 25 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 58 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், இன்று காலை முதல் நீர்திறப்பு 4 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர்களுக்கு தண்ணீர் தேவைப்பட்டதால், மேட்டூர் அணையில் இருந்து 2 டிஎம்சி தண்ணீரை திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் அடிப்படையில் கடந்த 3ம் தேதி முதல் மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தொடக்கத்தில், விநாடிக்கு 6,000 கன அடி வீதம் திறக்கப்பட்ட நீரின் அளவு பின்னர் விநாடிக்கு 5000 கனஅடியாக குறைக்கப்பட்டது. இதனிடையே இன்று (10ம் தேதி) மாலை முதல் டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீர் நிறுத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 600 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவை விட திறப்பு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. நேற்று 67.07 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 66.52 அடியானது. நீர்இருப்பு 29.78 டிஎம்சியாக உள்ளது.

நிருபரை கொலை செய்ய முயன்ற வழக்கு

மேலும் ஒருவரை பிடித்து போலீஸ் விசாரணை

திருப்பூர், பிப். 10– பல்லடம் அருகே நிருபரை கொலை செய்ய முயன்ற வழக்கில் மேலும் ஒருவரை தனிப்படை போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே உள்ள காமநாயக்கன்பாளையம் கே.கிருஷ்ணாபுரம் பகுதியை சேர்ந்தவர் நேசபிரபு (29). இவர் தனியார் தொலைக்காட்சி நிருபர். கடந்த 24ம் தேதி இரவு பல்லடம்- பொள்ளாச்சி சாலையில் உள்ள கே.கிருஷ்ணாபுரம் பிரிவு பகுதியில் மர்ம நபர்கள் நேசபிரபுவை அரிவாளால் வெட்டி விட்டு தப்பி சென்றனர். இதில், படுகாயமடைந்த அவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு கோவை தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். இதுகுறித்து காமநாயக்கன்பாளையம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்தனர். இதில், முன்விரோதம் காரணமாக நேசபிரபுவை வெட்டியது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து 10 போலீஸ் தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தேடி வந்தனர். இதில் பிரவீன் (27), சரவணன் (23), ஜெயப்பிரவின் (22), ஹரிகரன் (23), பாலபாரதி (25), மதன் (25), முகமது உமர் (25), கருப்புசாமி (20), அப்துல் சலாம் (25), புல்லட் மணி (26), ஆகிய 10 பேரை தனிப்படை போலீசார் கைது செய்தனர். இந்த நிலையில், கிருபாகரன் (26) என்பவர் கோவை ஜேம். எம்.7ல் சரணடைந்தார். மேலும் நேற்று முன்தினம் விக்கி என்ற சோமசுந்தரம் (27) என்பவரை தனிப்படை போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் தொடர்புடைய 13 பேரில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்சாரம் தாக்கி பெயிண்டர் பலி

ஈரோடு, பிப். 10– நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் மாதாபுரத்தை சேர்ந்தவர் செல்வம் (40). பெயிண்டர். இவர், நேற்று மதியம் ஈரோடு எஸ்கேசி சாலையில் ராஜாமணி வீட்டில் பெயிண்டிங் வேலை செய்து கொண்டிருந்தார். செல்வம் ரோலிங் பிரஷ் மூலம் பெயிண்ட் செய்தபோது, பிரஷ் மின் கம்பியில் உரசி, மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டார். இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் செல்வத்தை மீட்டு ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு செல்வம் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து ஈரோடு அரசு மருத்துவமனை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருமணமான மகள் மாயம்: தந்தை புகார்

ஈரோடு, பிப். 10– ஈரோடு மாவட்டம் புளியம்பட்டி காவிலிபாளையம் ராவுத்தன்புதூரை சேர்ந்தவர் பொன்ராஜ். தொழிலாளி. இவரது மனைவி லாவண்யா (35). (பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன).

கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபட்டால் கடந்த 2 மாதத்திற்கு முன் லாவண்யா அவரது கணவரை பிரிந்து, புங்கம்பள்ளியில் உள்ள பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார். கடந்த 3ம் தேதி லாவண்யா, அவரது பெற்றோர் வீட்டில் இருந்து வெளியேறியவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. கணவர் வீட்டிற்கும் செல்லவில்லை. அக்கம்பக்கம், உறவினர்கள் வீடுகளில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. இதுகுறித்து லாவண்யாவின் தந்தை புளியம்பட்டி போலீசில் புகார் அளித்தார். இதன்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து, மாயமான லாவண்யாவை தேடி வருகின்றனர்.

திருப்பூர் சிக்கண்ணா அரசு கல்லூரி வளாகத்தில் முப்பெரும் விழா நாளை நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொள்கிறார். அதற்காக அரங்குகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

வாலிபர் சடலம் மீட்பு

கூடலூர், பிப். 10– நீலகிரியில் கூடலூர் ஊட்டி சாலை பகுதியில் பைக்காரா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பைக்காரா அணையை ஒட்டிய வனபகுதியில் அடையாளம் தெரியாத வாலிபர் ஒருவரின் சடலம் கிடந்தது.

இதையறிந்த போலீசார் சம்பவயிடம் வந்து சடலத்தை மீட்டு ஊட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில், அவர் இறந்து 5 நாட்கள் ஆகியிருக்கலாம் என்று தெரிந்தது. வாலிபர் எதனால் இறந்தார், அவரின் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிப்ரவரி 10, 2024 சனிக்கிழமை

மாலத்தீவு புகைச்சல்

பிரதமர் மோடி இந்தாண்டு தொடக்கத்தில் லட்சத்தீவு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அங்கு அழகிய கடற்கரை, சாகச சுற்றுலா வசதிகள் குறித்து மோடி வெளியிட்ட படங்கள் உலகின் கவனத்தை ஈர்த்தன. இதை மாலத்தீவு அமைச்சர்கள் 3 பேர் சமூக ஊடகத்தில் விமர்சித்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் இந்தியாவில் உள்ள பிரபலங்கள் பலர் மாலத்தீவு சுற்றுலாவை புறக்கணித்து லட்சத்தீவு செல்வதாக அறிவித்தனர். லட்சத்தீவு அழகான கடற்கரை மற்றும் தீவுகளை கொண்டிருந்தாலும், அங்கு அதிகளவிலான சுற்றுலா பயணிகள் தங்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை.

இதனால் உள்நாட்டு சுற்றுலா மற்றும் வேலை வாய்ப்பை ஊக்குவிக்க லட்சத்தீவின் பிற தீவுகளிலும் சுற்றுலா கட்டமைப்புகளை மேம்படுத்த கவனம் செலுத்தப்படும் என இடைக்கால பட்ஜெட்டில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். அதன்படி லட்சத்தீவில் ரூ.3,600 கோடி செலவில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. லட்சத்தீவானது கேரள கடற்கரையிலிருந்து 220 கி.மீ. முதல் 440 கி.மீ. தூரம் வரை 36 தீவுகளாக 32 சதுர கிலோ மீட்டர் அளவுக்கு உள்ளது.

இங்கு மேம்பாட்டு பணிக்கு 13 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆன்ட்ரோத், கல்பேனி, கடாமத் தீவுகளில் துறைமுக வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. இதற்கான நிதி, துறைமுகம் மற்றும் நீர்வழிபோக்குவரத்து மேம்பாட்டுக்கான சாகர்மாலா திட்டத்தின் கீழ் கிடைக்க உள்ளது. இவ்வாறாக லட்சத்தீவை மேம்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்தும் வரும் அதேவேளையில், மாலத்தீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களுக்குப் பதிலாக திறமையான தொழில்நுட்ப பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவில் மூன்று விமானப்படைத் தளங்களில் இந்திய ராணுவம் உள்ளது. அவர்கள், மாலத்தீவு மக்களுக்கான மனிதாபிமான உதவிகளையும் மருத்துவ உதவிகளையும் வழங்கி வருகிறார்கள். அடுத்த சில நாட்களில் இரண்டு விமானப்படைத் தளங்களில் உள்ள இந்திய ராணுவ வீரர்களும் திரும்பப் பெறப்பட்டு, அவர்களுக்கு மாற்றாக திறமையான தொழில்நுட்ப பணியாளர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதனை இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளது. தற்போது மாலத்தீவில் இந்திய ராணுவ வீரர்கள் 70 பேர் உள்ளனர். கடலோர ரோந்துப் பணிகளை மேற்கொள்ள டோர்னியர் 228 ஹெலிகாப்டர் ஒன்றும், ஹெச்ஏஎல் துருவ் ஹெலிகாப்டர் இரண்டும் மாலத்தீவில் உள்ளன.

இந்தியா - மாலத்தீவு இடையிலான பாரம்பரிய உறவில் சமீபகாலமாக விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், புதியதாக பதவியேற்ற அந்நாட்டு அதிபர் முகமது முய்சு, சீனாவுடன் நெருக்கம் காட்டி வருகிறார். ஆனால் எதிர்கட்சிகள் சீனாவுடனான நெருக்கத்தை எதிர்க்கின்றன. இவ்விவகாரத்தால் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் கைகலப்பு வரை சென்றது. அதிபருக்கு எதிரான போராட்டங்களும் ஆங்காங்கே நடக்கின்றன. இதற்கிடையே லட்சத்தீவு விசயத்தில் ஒன்றிய அரசு ஆர்வம் காட்டி வருவதும், மாலத்தீவில் இருக்கும் இந்திய வீரர்களை திரும்ப பெறும் விசயத்திலும் இந்தியா - மாலத்தீவு இடையே புகைச்சல் இருந்து வருகிறது. இந்த புகைச்சலுக்கு தீர்வு காணவில்லை என்றால், இரு நாடுகளுக்கு இடையிலான பகை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மது விற்ற 3 பேர் கைது

ஈரோடு, பிப். 10– ஈரோடு மாவட்டம் புளியம்பட்டியில் சட்ட விரோதமாக மது விற்பனை நடப்பதாக போலீசாருக்கு புகார் வந்தது. இதன் பேரில், புளியம்பட்டி போலீசார் நேற்று தீவிர ரோந்து மேற்கொண்டனர். இதில், டாஸ்மாக் கடைகள் மூடிய நேரத்தில் சட்ட விரோதமாக மது பாட்டில்களை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாக புளியம்பட்டி அண்ணா நகர் முதல் வீதியில் அதே பகுதியை சேர்ந்த பழனிசாமி (70), புளியம்பட்டி-பவானி சாகர் சாலையில் ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த சதீஷ் (23), அதே பகுதியில் நாகை மாவட்டத்தை சேர்ந்த மதன்குமார் (29) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்து, அவர்களிடம் இருந்து 40 மதுபாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

பிரைம் அர்பன் டெவலப்மென்ட் இந்தியா லிமிடெட்

PRIME URBAN DEVELOPMENT INDIA LTD — we make your dreams come true

CIN: L70200TZ1936PLC000001

பதிவு அலுவலகம் : கதவு எண்.164/18 மருதாச்சலபுரம் மெயின் ரோடு, ரேஷன் கடை எதிரில், 60 அடி ரோடு, திருப்பூர் - 641 602 (தமிழ்நாடு, இந்தியா)

E-mail: companysecretary@ptlonline.com, Web: www.ptlonline.com

31.12.2023 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதத்திற்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் சுருக்கம்

(ஒரு பங்கின் வருமானம் தவிர மற்ற தொகைகள் யாவும் ₹ இலட்சங்களில்)

வ. எண்	விபரங்கள்	Standalone Results			Consolidated Results		
		காலாண்டு முடிவு 31.12.2023 Unaudited	ஒன்பது மாதங்கள் முடிவு 31.12.2023 Unaudited	தொடர்புடைய காலாண்டு முடிவு 31.12.2022 Unaudited	காலாண்டு முடிவு 31.12.2023 Unaudited	ஒன்பது மாதங்கள் முடிவு 31.12.2023 Unaudited	தொடர்புடைய காலாண்டு முடிவு 31.12.2022 Unaudited
1	செயல்பாடுகளின் மூலம் நிகர வருமானம் மற்றும் இதர வருமானம்	400.67	449.98	29.42	552.11	954.36	282.74
2	வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு முன்)	(53.01)	(154.90)	(42.93)	(56.67)	(154.68)	(33.30)
3	வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு பின்)	(53.01)	(154.90)	(42.93)	(56.67)	(154.68)	(33.30)
4	வரிக்கு பின்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (அசாதாரண செலவினங்களுக்கு பின்)	**(53.01)**	**(154.90)**	**(16.33)**	**(56.67)**	**(154.68)**	**(25.96)**
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் மற்றும் வரிக்கு பிந்தைய ஏனைய விரிவா வருமானமும் உள்ளிட்டது)	**(53.01)**	**(154.90)**	**(16.33)**	**(56.67)**	**(154.66)**	**(26.10)**
6	செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குத்தொகை (ஒரு பங்கிற்கு ரூ.2/- முக மதிப்பு)	532.87	532.87	532.87	532.87	532.87	532.87
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ளது போன்றது)	-	-	-	-	-	-
8	ஒரு பங்கின் வருவாய் (Face Value of Rs.2/- each) not annualised)						
	அ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு முன்பாக	(0.20)	(0.58)	(0.06)	(0.21)	(0.58)	(0.10)
	ஆ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு பின்பாக	(0.20)	(0.58)	(0.06)	(0.21)	(0.58)	(0.10)

குறிப்பு:

1. தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதி முடிவுகள் இந்தியன் கணக்கியல் தரநிலைகளில் (Ind AS 34) நிறுவனங்கள் சட்டம் 2013-ன் விதிகள் பொருந்தக்கூடிய மற்றும் SEBI (Listing Obligation and Disclosure Requirements) விதிமுறைகள் 2015இன் பத்திரங்கள் மற்றும் வழிகாட்டுதல்களால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் அளவீடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளை தணிக்கை குழு மதிப்பாய்வு செய்து 2024ம் ஆண்டு பிப்ரவரி 9 ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. Regulations 33 of SEBI (Listing and other Disclosure Requirements) Regulations, 2015-ன் படி இந்த முடிவானது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு.
3. மேலே உள்ளவை காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஆகும். இதன் விரிவான முடிவுகளை நிறுவனத்தின் வலைதளமன www.ptlonline.com மற்றும் BSE லிமிடெட் lwww.bseindia.com வலைதளத்திலும் பார்வையிடலாம்.

(For and on behalf of the Board)
புருஷோத்தம்தாஸ் பட்டோடியா
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN 00032088

இடம்:மும்பை
தேதி: 09.02.2024

Printed & Published by **Mr. Syed Mohamed,** on behalf of M/s. Kal Publications Pvt Ltd. and Printed at Murasu Offset Press No.1, Vincent Road, Coimbatore-641001 and Published at No.1, Vincent Road, Coimbatore-641001.
Editor: Mr. Syed Mohamed, RNI Regn: TNTAM/2005/51848 Phone: 0422 4467676, Advt: 0422 4467655, E-mail: tmurasucbe@gmail.com